Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 25 உ வியாழக்கிழமை (11 - 10 - 1990) ஹிஜ்ரீ 1411 ஏபி. அப். 21 ஓசை 236

## பிறக்கும் குழந்தைகள் எடை குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த நான்குமாதகாலப் பகுதியில் பிறந்த குழந்தைகள் பொதுவாக சராசரி நிறையிலும்விட 25 வீதம் நிறை குறைவாகவே இருக்கின்றன.

இப்பகுதியில் நடைபெற்ற சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கை (4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் புலிகளின் தாக்குதலுக்கு 6 இராணுவத்தினர் பலி

மன்னார் மாவட்டத்தில் வங்காலை இறங்குதுறையில் இருந்து தள்ளாடி இராணுவ முகாமிற்கு சென்று கொண்டிருந்த இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன் தினம் நடைபெற்ற இத்தாக்குதலில் ஒரு உயர் இராணுவ அதிகாரி உட்பட ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட இராணுவ அதிகாரியின் தலையை விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்று மக்களின் பார்வைக்கு வைத்தனர்.

கடந்த பல காலங்களாக இவ்வாறு தள்ளாடி முகாமிற்கு பொருட்களை விநியோகிப்பதற்காக வெளியே வரும் இராணுவத்தினர் இப்பகுதி மக்களின் பல பொருட்களை கொள்ளை அடித்தும், கடைகளை உடைத்து சூறையாடியும் வந்துள்ளனர். இதனால்இப்பகுதி மக்கள் பெரும் பீதியுடனேயே வாழ்ந்தனர்.

# தமிழர் தன்னாட்சியை இந்தியா உடன் அங்கீகரிக்க வேண்டும்

## விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒன்றுபட்ட இலங்கைக்குள் பிரச்சினையை தீர்க்கமுடியாது என்பதை உணர்ந்துள்ள இந்தியா, காலம் தாழ்த்தாது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச்செயலகம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஜே. ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இவ் ஒப்பந்தம் தமிழர் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாத போதும் எம்மீது திணிக்கப்பட்டது. இதை நாம் ஏற்க மறுத்தமையால் 10-10-1987-ல், எம்மீது பெரும் போர் தொடுக்கப்பட்டது. வடமராட்சியில் 'ஒப்பரேசன் லிபரேசன்' தாக்குதலை சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டபோது கண்டித்த இந்தியா வான்வழியாக (4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைமீது வை.12 விமானம் நேற்று மாலை குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டையை நோக்கி வை. 12 ரக விமானம் மூன்று குண்டுகளை வீசியது. நகரைப் பார்க்கச் சென்ற மக்கள் பதறியடித்துக் கொண்டு ஓடினர்.

நேற்று மாலை நான்குமுப்பது மணியளவில் யாழ். நகரை வட்டமிட்ட இவ் விமானம் மூன்றுகுண்டுகளை கோட்டை பகுதியை நோக்கி வீசியது. இக்குண்டுகளில் இரண்டு கோட்டையின் உள்ளேயும், ஒரு குண்டு பண்ணைக் கடற் பரப்பிலும்வீழ்ந்து வெடித்தது இவ்விமானம் நகரின் மேலா (4 ஆம் பக்கம் பார்க்க)

## எம்மை அழைத்துச் சென்றால் 67 அகதிகள் மூழ்கிய பகுதியைக் காட்டமுடியும்

(சென்னை)

கடலில்மூழ்கி மரணமடைந்ததாக கூறப்படும் 67 தமிழ் அகதிகளின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில், தப்பிச்சென்ற 11பேரும் தம்மை கண்டுபிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருப்போர் கூட்டிச்சென்றால் தாம் அந்த இடத்தை அடையாளம் காட்டுவதாகவும் கூறியுள்ளனர்.

நேற்று புதுக்கோட்டை காவல்துறை அதிகாரி ஒருவர் பதினொரு சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டது என்ற செய்தி உண்மையா என்று கேட்டதற்கு, இதுவரை எந்தவொரு சடலமும் கண்டுபிடிக்கவில்லை என்றும், தப்பிய (4ஆம் பக்கம் பார்க்க)

## 22 ஆம் திகதிக்கு முன் மூன்றாம் கட்ட நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள், திணைக்கள தலைவர்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர்கள் ஆகியோருக்கான பொதுக் கூட்டத்தில் நேற்று புதிய பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இடம் பெயர்ந்தவர்களுக்கான மூன்றாம் கட்ட நிவாரணத்திற்கான அனுமதியட்டைகள் யாவும் 12 ஆம் திகதி கொடுக்க ஆரம்பித்து விட வேண்டும் என்றும் இவர்களுக்கான நிவாரணமும் வரும் 22 ஆம் திகதிக்கு முன் கொடுத்து முடிக்கப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப் (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை ஆதரிக்காவிட்டால் இலங்கைத் தமிழினம் அழிந்துவிடும்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரந்தான் சிறிலங்கா இராணுவத்தை எதிர்த்துப் போராடி வருகின்றனர் என்பதுதான் இன்றையயதார்த்த நிலை. அவர்களைஆதரிக்காது விட்டுவிட்டால் இலங்கையில் தமிழினம்அழிக்கப்பட்டுவிடும் என தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி கருத்துத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதை நீண்டகாலமாகவே நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். கடந்த ஏழு, எட்டுமாதங்களாக இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக் குறித்து தேசிய முன்னணி அரசும், தமிழ்நாடு அரசும் என்ன (4 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் ஒருவர் சுட்டுக் கொலை

(திருக்கோயில்)

சிறிலங்கா கடற்படையினரால் மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இருவர் படுகாயமடைந்தனர்.

திருக்கோவில் கடற்பகுதியில் கடந்த திங்களன்று மீன்பிடிக்கச்சென்ற மீனவர் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனால் ஒருவர் பலியானார்; இருவர் படுகாயமடைந்தனர். இப்பகுதியில் கடற்படையினரின் அட்டூழியங்கள் அதிகரித்து வருவதால் மீனவர்கள் பீதியடைந்துள்ளனர்.

(மு)

## கர்னாடக மாநில சட்டசபை ஆளுனரால் கலைப்பு

(சென்னை)

கர்னாடக மாநில சட்டப் பேரவை நேற்று நண்பகல் முதல் கலைக்கப்பட்டுள்ளது. கர்னாடக மாநில ஆளுனர் பானுபிரதாப்சிங் தெரிவித்த சிபாரிசுக்கு புதுடில்லியில் நேற்று நண்பகல் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அவர் (4ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத் தீர்ப்பிற்கு திராவிட கழகம் கண்டனம்

(சென்னை)

மண்டல் கமிஷன் சிபாரிசுகளை அமுல்நடத்துவதை இடைநிறுத்தும்படி இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்த தீர்ப்பை திராவிட கழகம்கண்டித்துள்ளது. இந்தத் தீர்ப்பின் நகல்களுக்கு தமிழ்நாட்டின் பல நகரங்களில் தீயூட்டப்பட்டது. பெரியார்திடலில் இருந்து உயர் நீதி மன்றம் (4ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவில் - திருநெல்வேலி - நல்லூர் பகுதியில் விமான குண்டுவீச்சிற்கு ஒருவர்பலி; வைத்தியசாலை, வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில், திருநெல்வேலி, நல்லூரடி ஆகிய பகுதிகளில் பல நாட்களின் பின் சிறிலங்கா விமானப் படையின் நான்கு குண்டு வீச்சு விமானங்கள் பலத்த தாக்குதல் நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட பலர் காயமடைந்தனர். ஒருவர் கொல்லப்பட்டார். மருத்துவமனை உட்பட பல கட்டிடங்கள் சேதமடைந்தன.

நேற்று காலை 9.45 மணியளவில் இப் பகுதிகளில் வட்டமிட்ட குண்டு வீச்சு விமானங்கள் கோண்டாவில் சந்தி, அரசடிப்பிள்ளையார் கோவில் பகுதிகளில் நடாத்திய தாக்குதலில் தனியார் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு தமிழ் இளைஞர் உயிருடன் எரிப்பு

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவத்தால் ஆறு தமிழ் இளைஞர்கள் உயிருடன் எரிக்கப்பட்டுள்ளனர். கடந்த திங்களன்று மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கருவேப்பங்கேணி என்ற இடத்தில் ஆறு தமிழ் இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து ரயர் போட்டு எரித்துள்ளனர்.

(மு)

## வரிவிளம்பரம்

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கை யாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக் கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங் களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B/1470)

### தவறிவிட்டது

நாகநாதர் சந்திராவதி என்பவருடைய அடையாள அட்டை இல. 658412795V யாழ். பனை அபிவிருத்திச் சபைக் காரியாலயப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து "ஈழநாதம்" காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (B-1486)

### லயன்ஸ் - சேவை

லயன்ஸ் சமூகம், வட்டுக்கோட்டை Lions Club Vaddukoddai லயன்ஸ் இலவச வைத்திய நிலையம் சித்தன்கேணியில் லயன்ஸ் கட்டிடத்தில் 14-10-1990 ஞாயிறு காலை 10 00 மணிக்கு அகதி முகாமில் தங்கியுள்ளோர் நன்மைக்காக திறந்து வைக்கப்படும். தொடர்ந்தும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இந்நிலையம் சேவைபுரியும் துரைசிங்கம் ரகு (தலைவர்.) (B-1480)

### யாழ். பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள சகல பீடங்களுக்குமான விரிவுரைகள் 1990 நவம்பர் 5ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகும்.

துணைவேந்தர்
யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்.
1990-10-09.

### பட்டப்பின் கல்வி டிப்ளோமா-1990

பகுதிநேரக் கற்கை நெறிகள் பகுதி 1, பகுதி 11க்கான விரிவுரைகள் 1990 நவம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகும்.

முழுநேரக் கற்கை நெறிக்கான விரிவுரைகள் 1991 ஜனவரியில் ஆரம்பமாகும்.

துணைவேந்தர்.
யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்.
1990-10-09.

### Postgraduate Diploma in Education

The lectures for the Part-Time Course Parts one and two will commence on the 10th November, 1990.

The Full Time Course will commence on January 1991.

Vice-Chancellor.
University of Jaffna,
Thirunelvely.
1990-10-09.

### Re-Opening of the University of Jaffna For Teaching

The re-opening of all the Faculties of the University of Jaffna for teaching including new admissions will commence on Monday the 5th November 1990.

Vice-Chancellor.
University of Jaffna.
1990-10 09. (B- 1485)

### டில்கா வாச் வேக்ஸ் (Dilka Watch Works)

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B-1444)

### ஹெலித் தாக்குதல்

(பூநகரி)

நேற்று முன்தினம் சுமார் 12 மணியளவில் சங்குப்பிட்டியில் ஹெலி தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. (71)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திரு. சின்னத்துரை வேலாயுதபிள்ளை

(இளைப்பாறிய இ.போ.ச. நடத்துனர்)

| | |
|---|---|
| தாய்மடியில் | ஆண்டவன் அடியில் |
| 23-05-1928 | 11-09-1990 |

சிங்கப்பூர் மாநகரில் இருபத்தெட்டாம் ஆண்டில் சின்னத்துரை தம்பதிகளின் மகனாய்ப் பிறந்து யாழ். பெருமாள் கோவிலடியில் வாழ்ந்த வேலாயுதமவர்கள் இ. போ. ச.வில் நடத்துனராகக் கடமை புரிந்து இராஜலட்சுமியை கரம்பற்றி வாழ்ந்து சந்திரன், ரவி, ராணியை புத்திரச் செல்வங்களாகவும் கண்ணன், வவா, பாப்பாவை மருமக்களாகவும் கிரி, வர்ஷி, கீதனை பேரப்பிள்ளைகளாகவும் பெற்று மகிழ்ந்தவர் கொடிய புற்று நோயினால் பாதிக்கப்பட்டு பற்றற பரமனடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


வே. கணேசலிங்கம்
(மின் இணைப்பாளர்)
165, இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (R. 714)

# ஓராண்டு இதய அஞ்சலி

கறைபடிந்துபோன பாடங்களின் முடிவில் எப்போதும் புதிய வரலாற்றைப் படைப்பார்கள் மக்கள்!



**நடனசிகாமணி**
வீரஜனனம்: 12-10-1969
(ரகு. பரந்தன் அரசியல் பொறுப்பாளர்)



**குமாரராஜா** (குமார்)
வீரஜனனம்: 27-07-1968



**ரவிச்சந்திரன்** (ரவி)
வீரஜனனம்: 01-08-1968

**வீரமரணம்: 06-10-1989**

எதிர்காலத்தில்
இதயங்களாக
இருக்கவேண்டிய நீங்கள்!
நிகழ்காலத்தின்
நிலச்சகதிக்குள் சிக்குண்டதேன்?

விடுதலை வேண்டி
வீறுகொண்டு புறப்பட்ட
தளிர்கள் நீங்கள்!
அர்த்தமின்றி ஆயுதமேந்திய
அடிவருடிகளால்
அழிக்கப்பட்டதேன்?

உங்கள் இழப்பிற்காக
இவர்களை பழிவேண்டப்போவதில்லை
அடிவருடிகளின்
ஆயிரம்... ஆயிரம்...
இழப்பிற்கு உங்கள்
இழப்பு ஈடாகமாட்டாது!

(B 1468

—சிற்றூர் அவைகள். உருத்திரபுரம், சிவநகர்

**சிந்தனைக்கு**

வீதியில் முட்களைத் தூவுபவன்,
வெறும் காலால் நடக்கக் கூடாது.
- பெஞ்சமின்ஃபிராங்ளின்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 11-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
க. பெ. எண் 05

## 'நாகரிகமான யுத்தம்'

கோட்டை இராணுவ முகாமில் சண்டையில் இறந்த பன்னிரெண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் சடலங்களுக்கு உரிய மரியாதை கொடுத்து, தமிழரின் நாகரிகத்தின் வெளிப்பாடாக சிறிலங்கா அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்காக செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுதலைப் புலிகள் ஒப்படைத்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் தமிழரின் உயரிய பண்பாட்டை வெளிப்படுத்தியது இது முதற்தடவையல்ல. இதற்கு முன்னரும் பல தடவைகள் வெளிக்காட்டியுள்ளனர்.

1986 ஆம் ஆண்டு அடம்பனில் கைப்பற்றப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரின் சடலங்களையும், உயிருடன் பிடிக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரையும் யாழ்ப்பாணத்தில் வைத்து ஒப்படைத்தனர்.

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவ வீரர்களின் சடலங்களை ஒப்படைக்க முன்வந்தபோதும், இந்தியா அதனைப் பெற்றுக்கொள்ளவில்லை. அதேவேளை இருமுறை சிறைப்பிடிக்கப்பட்ட இந்திய இராணுவத்தினர் இருபதுபேரை விடுதலை செய்தனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் தமிழரின் நாகரிகத்தை தமது எதிரியிடமும் காட்டியபோதும் சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் தமது காட்டுமிராண்டித்தனமான நாகரிகத்தையே தொடர்ந்து வெளிப்படுத்தி வந்தது.

இனப்பிரச்சினை கூர்மையடையத் தொடங்கியதில் இருந்து சிறிலங்கா அரசாங்கமும் தனது (அ)நாகரிகத்தை காலத்திற்குக்காலம் பல வழிகளில் வெளிப்படுத்திக் கொண்டே வந்தது.

1979 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டுவந்து இறந்தவர்களின்உடல்கள்உரியவர்களிடமும் ஒப்படைக்கத் தேவை இல்லை என தனது நாகரிகத்திற்கு மூத்திரை குத்திக்கொண்டது.

1983 இல் வெலிக்கடைச்சிறையில் அரசபாதுகாப்பில் இருந்த ஐம்பத்தியாறு தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்தது.

கொக்கட்டிச்சோலையில் இருந்து மண்டைதீவு வரை பலநூறு அப்பாவித் தமிழரைப் படுகொலை புரிந்தது.

சர்வதேச யுத்த முறைகளுக்கு மாறாகவும், மனித உரிமைகளுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டது.

நூல் நிலையங்கள் தீயிட்டும் குண்டு வீசியும் அழிக்கப்பட்டன.

போக்கிடமற்ற அநாதைகளின் இல்லங்களையும் வயோதிபர் விடுதிகளையும் தாக்கிச் சிதறடித்தது.

தேவாலயங்கள், கோயில்கள், பள்ளிவாசல்கள் என்ற பேதமின்றி விமானத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இவை யாவற்றிற்கும் மேலாக பாதுகாப்பிற்கென மக்கள் ஓடிச்சென்று தங்கியிருந்த அகதிமுகாம்கள் மீது தாக்குதல் செய்து பல மக்களைக் கொன்றது. அத்தோடு அம்முகாம்களுக்குள் இருந்த பெண்கள் மிருகத்தனமாக பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

மேலும் சிறிலங்கா செய்த நம்பிக்கைத்துரோகத்தினால் குமரப்பா - புலேந்திரன் உட்பட்ட பன்னிரண்டு புலிகள் மரணமடைந்தார்கள்.

அதேவேளை. தமிழருக்கு எதிரான இந்த யுத்தத்தைப்பற்றி சிறிலங்கா ஜனாதிபதி குறிப்பிடுகையில் இது 'நாகரிகமானவர்களுக்கும், அநாகரிகமானவர்களுக்கும்' இடையில் நடக்கும் 'யுத்தம்' எனத் தெரிவித்துள்ளார். ஆனால் யுத்தத்தில் சிறிலங்கா இராணுவம் நடந்துகொள்வது ஒருபோதும் மனிதருக்குரிய நாகரிகமாகத் தெரியவில்லை இது மிருகங்களுக்குரிய நாகரிகமான செயற்பாடாக இருக்கலாம்.

அதாவது 'சிங்களவரின்' உருவாக்கம் மிருகங்களுடன் தொடர்புடையது என விளக்கப்படுவதினால் இதனை அவர் தமது நாகரிகம் எனத் தெரிவித்திருக்கலாம். ஆனால் பௌத்தம் உயர்வானதொரு பண்பாட்டை வெளிப்படுத்தினும், இடையில் வந்து சிங்களவருக்குள் புகுந்து கொண்ட பௌத்தத்தால் இவர்களுக்கு உயர்ந்த நாகரிகத்தை வழங்க முடியவில்லைப்போலும்.

## இளைஞனின் பண மோசடி

(சித்தங்கேணி)

கடந்த வாரம் சித்தங்கேணியைச் சேர்ந்த நவரட்ணம் (ஆசிரியர்) என்பவரின் வீட்டுக்கு வந்த இளைஞர் ஒருவர் அங்கே இருந்த அவரது மனைவியிடம் ''ஐயா விறகுகாலையில் நின்று விறகு வாங்குகிறார் 500/- வாங்கி வரட்டாம்'' எனக் கூறினாராம். அவர்கள் '500/- இல்லையே' எனக் கூறிய போது 'இல்லா விட்டால் இருக்கிறதை வாங்கி வரச் சொன்னார்' எனக் கூறினாராம். அவர்கள் 250/- ரூபாவைக்கொடுத்து ''உம்மை எங்களுக்குத் தெரியவில்லையே'' எனக் கேட்டபோது நான் சின்னத்துரையின் மகன் எனக் கூறியவாறு சைக்கிளை எடுத்துக் கொண்டு நழுவி விட்டாராம்.

இதே நபர் கடந்த வாரம் சித்தங்கேணி,சங்கானைப்பகுதிகளில் பல வீடுகளில் இவ்வாறு விறகு வாங்கிவர எனக் கூறி பல ரூபாய்களை வாங்கிச் சென்றுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## சீன - இந்திய யுத்தமும்

(நேற்றைய தொடர்ச்சி)

இலங்கை அரசின் சார்பில் இந்தியா செயற்பட்டது. அவ்வாறு இந்தியாவைச் செயற்படச் செய்வதில் ஜே. ஆர். வெற்றிபெற்றார். இறுதியில் இந்திய அரசும் 'அமைதிப்' படையும் மூட்டை முடிச்சுக்களை மட்டுமன்றி தோல்விகளையும் அவமானத்தையும் கூடவே தமது தலைகளிற் சுமந்துகொண்டு நாட்டை விட்டு வெளியேறினர்.

1962 ஆம் ஆண்டு நிகழ்ந்த சீன - இந்திய யுத்தமும், அதனால் இந்தியாவிற்கு ஏற்பட்ட தோல்வியும் 'சுதந்திர' இந்தியாவின் வரலாற்றில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. சீனாவுடனான தோல்வி முழு இந்தியாவிலும் ஒரு பெரும் அதிர்ச்சி அலையைத் தோற்றுவித்தது. முழு இந்திய மக்களும் திடுக்குற்றனர். இந்தியாவின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையும், இராணுவ பலமும் பெரும் கேள்விக்குரியதாக மாறியது. இத்தோல்வி இந்திய வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து இந்தியாவின் அரசியல், இராணுவம் என்பவற்றில் புனர் நிர் மாணம் மேற்கொள்ளப்பட்டது.

1962 ஆம் ஆண்டு சீனாவுடனான யுத்தத்தில் பெற்ற திருப்பத்தைவிடவும் மேலான திருப்பத்தை 1987 இலங்கை இந்திய ஒப்பந்தமும், அதன் பெயராலான யுத்தத்தில் ஏற்பட்ட தோல்வியின் மூலம் இந்தியா இன்று பெற்றுள்ளது. இலங்கை மண்ணில் இந்தியா பெற்ற தோல்வி சீனாவுடனான பெரிய யுத்தத்தில் பெற்ற தோல்வியையும் விடப்பெரிதெனச் சொன்னால் அதுபலநர்தும் ஆநிசபநீப்பு தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நினைவுக்கு வரும் போதெல்லாம் தமிழ் மக்களின் கண்கள் அக்கினிப் பிழம்பாக கோபாவேசத்தில் சிவக்கும் என்பதும் எதிர்காலத்தில் இது மேலும் மேலும் உணரப்படும் என்பதும் ஐயமில்லை.

சாரணன்

### ஈழ - இந்திய யுத்தமும்

மாக இருக்கலாம். ஆனால் அதுவே உண்மை.

இந்தியாவின் இராஜதந்திரம், இராணுவம், உளவுத்துறை, அரசியல் ஆய்வுத்துறை ஆகிய அனைத்துமே இந்தத் தோல்வியின் மூலம் கேள்விக்குரியதாகி விட்டது. இத்துறைகளில் மீண்டும் பெரும் புனருத்தாரணங்களைச் செய்யவேண்டும் என்கின்ற பாடத்தினை எமது மண்ணில் தான் அது கற்கவேண்டி ஏற்பட்டது.

எனவே இந்திய அரசு தமிழ் மக்களுக்கு இழைத்த துரோகத்திற்கு எதிராக தமிழ் மக்கள் புரிந்த போர் ஒரு சிறிய போர் அல்ல என்பதை வரலாறு என்றும் நினைவுகூரும்.

எனவே குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு விடுதலைப் புலிகளின் உயிரையும் பாதுகாக்கத் தவறிய பெரும் குற்றத்தை இந்தியா ஒருபோதும் மறக்க முடியாது. இதன் பொருட்டு இலங்கை, இந்திய அரசுகள் இழைத்த கொடுமையையும் துயரங்களையும் தமிழ் மக்கள் ஒருபோதும்மறக்கமாட்டார்கள். பன்னிரு வீரர்களின் உயிர்

(முற்றும்)

## சட்டப்பேரவையைக் கலைக்கும் யோசனையை ஏற்க வேண்டாம்

### 112 இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள் கோரிக்கை

(பெங்களூர்)

கர்நாடக மாநில சட்டப் பேரவையைக்கலைக்க முதலமைச்சர்வீரேந்திர பட்டேல் கேட்டால் அதனை ஏற்கவேண்டாம் என 112 எம். எல். ஏ க்கள் ஆளுநரிடம் கேட்டுக்கொண்டனர்.

வீரேந்திர பட்டேலின் தலைமையின் மீதானநம்பிக்கையை தாம் இழந்து விட்டதாகக் கூறிய இந்த எம். எல். ஏக்கள் ஆதலால் தான் முதல்வரை பதவி விலகும்படி தமது கட்சி கேட்டதாகவும் தெரிவித்தனர்.

இதற்கு முன்னதாக வீரேந்திர பட்டேல் உடல் நலமில்லாமல் இருக்கிறார் என்ற காரணத்திற்காக அவர் பதவி விலகுகிறார் என இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

மாநில காங்கிரஸ் கட்சியினருக்கே தமது பதவி விலகல் குறித்து பேசுவதற்கு அதிகாரம் இருக்கிறது எனக் குறிப்பிட்ட முதல்வர் வீரேந்திர பட்டேல் தலைமையகத்திற்கும் தனக்கும் இதுபற்றித் தொடர்பில்லை எனவும் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிடுகையில் தாம் பதவியில் இருந்து விலகப் போவதில்லை எனவும் உறுதிபடக் கூறினர்.

இதேவேளை இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ க்கள் தம்முடன் சந்தித்து கதைத்தது குறித்து செய்தியாளர்களிடம் பேசியஆளுநர் பானு பிரதாப் சிங் இந்திரா காங்கிரஸ் தமது பெரும்பான்மையை சட்டப் பேரவைக் கூட்டத்தில்தான் திருபிக்கவேண்டும் என்றும், நேற்று நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் சட்டப்பேரவைக் கூட்டத்தின் முடிவுகள் கூட செல்லுபடியற்றது என்றும் கூறினார்.

## அணு ஆயுத சோதனைகளைக் கட்டுப்படுத்த இணக்கம்

(மொஸ்கோ)

நிலத்தின் கீழ் செய்யப்படும் அணு ஆயுத சோதனைகளையும், அமைதிக்கான நிலக்கீழ் அணு சாதன வெடிப்புக்களையும் மட்டுப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தை சோவியத் யூனியனும் அமெரிக்காவும் அங்கீகரித்துள்ளன.

இதற்காக நேற்றுமுன்தினம் சோவியத் யூனியனின் இரு சபைகளிலும் பலத்தவிவாதங்கள் நடைபெற்றன. முடிவில் இருசபைகளின் அங்கீகாரத்துடன் ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டது.

அத்துடன் உலகில் உள்ள எல்லா அணு ஆயுதங்களையும் அழித்து விடுமாறு எல்லா நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களையும்சோவியத் யூனியன் பாராளுமன்றம் கேட்டுக் கொண்டது.

## ஐ.நா.வில் இஸ்ரேலுக்கு எதிராக அமெரிக்கா வாக்களிக்க முடிவு

(வாஷிங்டன்)

ஜெருசலேத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் குறித்து இஸ்ரேல் மீது ஐ. நா. பாதுகாப்புச்சபை எடுத்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதாக அமெரிக்கா கூறியிருக்கிறது.

வன்முறைச் செயல்களை இந்த தீர்மான வாசகம் கண்டனம் செய்கிறது என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் வாஷிங்டனில் இதனைத் தெரிவித்தார்.

### ஆந்திரப்பிரதேசத்தில்

## புகையிரதப்பெட்டிதீவைப்பு; 47 பேர் கருகி மரணம்

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் கோரைப் பன்னி புகையிரத நிலையத்திற்கு அருகே நேற்று முன்தினம் புகையிரதப்பெட்டி ஒன்றிற்கு தீவைக்கப்பட்டதில் 47பேர் கருகி மாண்டனர். 14 பேர் காயமுற்றனர்.

ஹைதராபாத்திற்கும் வாரங்கல் நிலையகாகதிய பயணிகள் ரயிலின் ஒரு பெட்டிக்குள் உள்ளூர் இளைஞர்கள் சிலர் ஏறி எல்லாக் கதவுகளையும் அடைத்து விட்டு திரவம் ஒன்றை ஊற்றி தீவைத்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து இடம்பெற்ற வேளையில் 100 பயணிகள் அப்பெட்டிக்குள் இருந்ததாகவும் இறந்தவர்கள் காயமடைந்தவர்களைத் தவிர ஏனையோர் கதவுகளை உடைத்துக்கொண்டு வெளியே குதித்ததாகவும் ரயில் நிலைய காவல் துறை அதிகாரி தெரிவித்தார்.

இறந்தவர்களின் சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு கருகி இருந்ததாக கூறப்படுகிறது.

## கடமைக்கு உடன் வரவும்

(யாழ்ப்பாணம்)

கடமைக்குச் சமுகம் தராத வவுனியா தபாலக ஊழியர்கள் அனைவரையும் உடனடியாகக் கடமைக்கு வரும்படி வவுனியா மாவட்ட தபால் அத்தியட்சகர் சி. பாலகிருஷ்ணன் கேட்டுக்கொள்கிறார்.

## காட்டு யானைக்கு ஒருவர் பலி

(பூநகரி)

பூநகரி பல்லவராயன்கட்டு வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காட்டுயானை தாக்கி, ஒருவர் ஸ்தலத்திலே பலியானார். கொல்லப்பட்டவர் திரு. செல்லையா என்பவர் ஆவர். வேலை செய்து வீடு திரும்பும் வேளையிலே இவ்வாறு காட்டுயானையின் தாக்குதலுக்குப் பலியானார். பல்லவராயன்கட்டு தும்புருவில் அவரின் சொந்த இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

(71(

# பாடசாலைகளைத் திறந்து வகுப்புக்களைநடத்தப்பணிப்பு

(அலுவலக நிருபர்)

பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வதுடன் சகல பாடசாலைகளையும், உடனடியாக ஆரம்பித்து, பாடசாலையிலுள்ள சகல வகுப்புகளையும் வழமைபோல் நடாத்துமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் தொடர்பாக கல்வித் திணைக்களத்தில் நடாத்தப்பட்ட கல்வி அதிகாரிகளின் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது இது தொடர்பாக கல்விப்பணிப்பாளர் விடுத்த அறிக்கையில், அதிபர், ஆசிரியர்கள் தவறாது அவரவர் பாடசாலைகளுக்கு எவ்வித நிபந்தனையுமின்றிக் கடமைக்குச் செல்ல வேண்டுமென்றும் கால நிலை சீராகும் வரை பாடசாலைகளை ஒரு நேரப் பாடசாலைகளாக நடாத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும் போக்கு வரத்து வசதிகள் சீராகும் வரைமாணவர்களை அவர்களின் வசிப்பிடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளில் சேர்வதற்கு அதிபர்கள் தற்காலிக வசதிகள் செய்து கொடுப்பதுடன், அகதிகள் தங்கியிருக்கும் பாடசாலைகள் தொடர்பாக அவ்வப்பகுதி உதவி அரச அதிபர்களின் ஆலோசனையுடன் மாற்றொழுங்குகளை மேற்கொண்டு, அதுபற்றி உதவிக் கல்விப்பணிப்பாளர்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் வெளிமாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்திருக்கும் மாணவர்களுக்கு பாடசாலைகளில் கல்வி பயில அதிபர்கள் ஆவன செய்வதுடன், அனுமதி வழங்குவதற்கு ஆவணங்கள் வேண்டுமென நிர்ப்பந்தித்தலாகாது எனவும் கல்விப்பணிப்பாளர் தமது அறிக்கை மூலம் தெரிவித்தார். (மோ)

## புலிகளை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கொண்டிருக்கின்றன என்பதுவே தெரியவில்லைஎன்றும் குறைகூறினார்.

விடுதலைப்புலிகள் பற்றி பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது அவர்களைப் பற்றி எமக்கு ஒரு கருத்துண்டு எனக் கூறிய அவர் இந்திய இராணுவத்தைஅனுப்பிதமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் எமது கருத்து என்றார்.

## கோட்டை மீது

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப் பறந்ததும் யாழ். நகரின் விமானக் குண்டுவீச்சு அனர்த்தங்களைப் பார்வையிடச் சென்ற மக்கள் பதறியடித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தனர். இந்த குண்டுவீச்சால் சுசிலா என்ற இருபது வயது யுவதி ஒருவர் காயமடைந்தார். (லோ)

## விமானக் குண்டுவீச்சு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனை உட்பட அப் பகுதியில் இருந்த ஒரு வீடும் ஐந்து கடைகளும் பலத்த சேதமடைந்ததுடன் வாகனம் ஒன்றும் சேதமடைந்தது. அத்துடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிவபாக்கியம் (வயது 35) என்பவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். இவரின் கணவர் வரதராசா (வயது 37) படுகாயம் அடைந்துள்ளார். இவரின் ஒரு கால் துண்டிக்கப்பட்டிருக்கிறது. இவர்களின் இரண்டு வயதுக் குழந்தை ஜதீஸ்வரன் படுகாயம் அடைந்துள்ளார். மற்றுமொரு குடும்பத்தில் சண்முகலிங்கம் (வயது 47) மனைவி மகாதேவி (வயது 41) என்பவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

திருநெல்வேலி வடக்குப் பகுதியில் நடந்த தாக்குதலில் சுமார் ஐந்து வீடுகள் பலத்த சேதமடைந்தன.

நல்லூரடி கோவில் வீதிப் பகுதியில் நடந்த தாக்குதலில் மூன்று வீடுகள் சேதமடைந்ததுடன் பலர் காயமடைந்தனர். விமானங்கள் வானில் வட்டமிட்டதும் இப்பகுதி மக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சமடைந்தமையால் மேலதிக உயிர் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. (க)

## பிறக்கும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் அரசின்பொருளாதாரத்தடையுமே இந்நிலை ஏற்பட்டதற்கு காரணம் என கூறப்படுகிறது. (க)

# ஒய்வூதியக்காரர்களுக்கு கப்பல் பணத்தில் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள ஒய்வூதியதாரருக்கு கப்பல்மூலம் கொண்டுவரப்படும் பணத்தில் குறிப்பிட்ட தொகையை ஒதுக்கீடு செய்து வழங்கப்பட உள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

விரைவில் வடபகுதியில் பணத்தின் திரவநிலை ஓட்டத்தை சீர்செய்ய பணம் கொண்டுவரப்படுமானால் தாம் இந்த ஏற்பாட்டைச் செய்ய இருப்பதாகவும் அவர் கூறினாரர. (லோ)

## நீதிமன்றத்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி ஊர்வலமாகச்சென்று மேற்படி தீர்ப்பின்நகலை எரித்து தமது கண்டனத்தை தெரிவிக்கமுயன்ற திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி உட்பட 150பேர் சென்னை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். விழுப்புரம்,சேலம், திருத்தணி திருக்கழுகுன்றம்,மதுரை உட்பட பல்வேறு நகரங்களிலும் இதேகாரணத்திற்காக நூற்றுக் கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 22ம் திகதிக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. இதே போல பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான 2 ஆம் கட்ட நிவாரணமும் கொடுத்து முடிக்கப் படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதே கூட்டத்தில் ஓய்வூதியர்களுக்கும் மிக விரைவில் நிவாரணம் பெற்றுத் தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக யாழ். அரச அதிபர் கூறினார். (லோ)

## 67 அகதிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அகதிகள் தம்மையும் கூட்டிச்செல்லவேண்டும் என்று கேட்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை இறந்துபோனவர்களில் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி கோவிலடியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரும் அடங்குவர்.

கணேஷ்ஐயர் கோபாலகிருஷ்ணக் குருக்கள் (வயது 54) கோ. வாலாம்பிகாதேவி (வயது 39) கோ. ரமேஷ் சர்மா (வயது 20) கோ. சித்ரா (வயது 18) கோ. ராஜேஷ் சர்மா (வயது16) கோ. ஜெயதீஸ் சர்மா (வயது 14) என்பவர்களே இவ்வாறு இறந்தவர்களாவர்.

இவர்களில் கோ. ரமேஷ் சர்மா நீந்திக் கரைசேர்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் இச் செய்தி ஊர்ஜிதம் செய்யப்படவில்லை,

## கர்னாடக

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இது அமுலுக்கு வந்துள்ளது. இந்திய அரசியலமைப்பின் 356 ஆவது சரத்தின் கீழ் கவர்னர் பானு பிரதாப்சிங் மேற்கண்ட சிபாரிசைத் தெரிவித்திருந்தார்.

இந்திரா காங்கிரசின் ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வீரேந்திர பட்டேல் இம் மாநில முதல்வராக இருந்தார். திரு. வீரேந்திரபட்டேலை பதவி விலகும்படி இந்திராகாங்கிரஸ் தலைமை கோரியதை அடுத்து கட்சிக்குள் எழுந்த நெருக்கடி நிலையினாலேயே சட்ட மன்றம் கலைக்கப்பட்டதாக தெரிய வருகிறது. இதேவேளைமாநில சட்டசபைகளைக் கலைக்கும் கவர்னரின் அதிகாரங்களைத் தெளிவாக வரையறுக்க வேண்டியதன் அவசியம்பற்றி தமிழக முதல்வர் மு. கருணாநிதி மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

## தமிழர் தன்னாட்சியை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணவுப் பொட்டலங்களைப் போட்டது. ஆனால் 10-10-87ல் இந்தியா-தமிழீழம்மீது போர் தொடுத்தபோது குடாநாட்டில் 30 நாட்கள் தொடர்ந்து ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டது. இக்காலத்தில் அகதி முகாம்கள், பாடசாலைகள், மின்சார நிலையங்கள் யாவும் தாக்குதலுக்கு உள்ளாகின. 20 நாட்களுக்குள் 2000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். குடாநாட்டில் 5இலட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாயினர். யாழ். போதனா வைத்தியசாலைமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வைத்தியர், தாதிகள் நோயாளர் உட்பட 80க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். 2 1/2 ஆண்டுகள் நடந்த தமிழீழப் போரில் 5000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்ட அதேவேளை கூலிப்பட்டாளங்களைக் கொண்டு தீர்வுகள் திணிக்கப்பட்டன.

ஆனால் தமிழீழம் இவற்றிற்கெதிராகப் போராடியது. இறுதியாக இந்தியா தமிழ் மக்கள் மீது அடக்குமுறையினாலோ அல்லது வேறு எந்த விதத்தினாலுமோ அவர்கள் விரும்பாத தீர்வைதிணிக்கமுடியாது என்பதை உணர்ந்து இங்கிருந்து வெளியேறியது.

இதேவேளை இந்திய-சிறிலங்கா ஒப்பந்தத்தை தனக்கு சார்பாக சிறிலங்கா பயன்படுத்தி வெற்றியும் கண்டது. அத்தோடு இந்திய - தமிழீழப் போரின்போது தனது படைப் பலத்தையும் பெருமளவில் வளர்த்துக்கொண்டது. அதேவேளை தமிழீழ - இந்தியப் போர் இராணுவரீதியாக தமிழீழ மக்கள் மீது அவர்களது அபிலாசைக்கு புறம்பான தீர்வைத் திணித்துவிட முடியாது என்பதை உணர்த்தியிருந்தது.

இருந்தும் தமிழீழ - சிறிலங்காப் பேச்சுவார்த்தையில் நாம் விட்டுக் கொடுக்காமையும், தமிழ் மக்களின் அபிலாசைகளை ஏற்க மறுக்கும் சிங்கள இனவாதமும், சிறிலங்கா படைபலத்தில் கொண்ட அபார நம்பிக்கையுமே இப் போருக்கான காரணங்களாகும்.

எனினும் இந்தியப் படை கடந்த காலத்தில் செய்ததைப் போலவே இன்று சிறிலங்காவும் செயற்படுகிறது. காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. வைத்தியசாலைகள், பாடசாலைகள், அகதிமுகாம்கள், மின்சார நிலையங்கள் என்பன தாக்கப்பட்டன. குறுகிய காலத்தினுள் 3000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். எட்டு லட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாக்கப்பட்டனர். ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் இந்தியாவுக்குச் சென்றனர்.

இந்தியா செய்ததைப் போலவே கூலிப் பட்டாளங்களின் துணைகொண்டு தமிழ் மக்களின் மீது ஒரு தீர்வை திணித்து விட சிறிலங்கா முயற்சிக்கின்றது. இம் முயற்சியின் புதிய பரிமாணங்களாக முஸ்லிம் காங்கிரஸ், U.N.P. S.L.F.P முஸ்லிம்கள் அவர்களின் ஊர்காவற்படையும் தமிழீழ மக்களை அழித்தும், அவர்களின் பாரம்பரிய பிரதேசத்திலிருந்து துரத்தியும் வருகின்றன. தமிழீழப் போராட்டத்தில் இதுவரை எத்தனையோ துரோகத்தனங்களைச் சந்தித்து விட்டோம். இப்போது புதிய துரோகிகளைச் சந்திக்கிறோம்.

தற்போது தமிழர் தாயகப் பகுதிகளில்நடக்கும்தாக்குதல்கள் குறித்து பேசும் தார்மீக பலம் இந்தியாவுக்கு இல்லை என நினைத்து சிறிலங்கா செயற்படுகின்றது. அதேவேளை அதற்கு ஏற்றாற்போல் இந்தியாவும் மௌனம் சாதிக்கின்றது.

இந்தியாவுக்கு தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்க்க முடியாது என்பது நன்கு தெரியும். இந்நிலையில் இந்தியா காலம் தாழ்த்தாது தமிழ் மக்களின் தன்உரிமையை (சுயநிர்ணய உரிமையை) அங்கீகரிக்க வேண்டும்.

சிறிலங்காவும் கடந்த 42 ஆண்டுகால படிப்பினையைக் கருத்திற் கொண்டு குறுகிய வழியினைக் கையாண்டு தமிழ் மக்களைஅழிக்கும் முயற்சியை கைவிட்டு தமிழ் மக்களின்தன்னுரிமையை அங்கீகரிக்க முன்வர வேண்டும்.

அதேவேளை சிங்கள மக்கள் ஒன்றை உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களைக் கொலை செய்வதற்கும்,அடக்கவும் என்று ஆக்கப்பட்ட சட்டமும், வளர்க்கப் பட்டபடையும்,இன்று சிங்கள இளைஞர்களை அழிக்கவும் அடக்கவும் பயன்படுகின்றது சிங்களமக்கள் இதைஉணர்ந்துதமிழ்மக்களின் நியாயமான போராட்டத்தை அங்கீகரிப்பதன் மூலம் அடக்குமுறை அரசின் அழிவுகளிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளலாம்.

தமிழீழ மக்களே! கடந்த மூன்றாண்டு காலப்படிப்பினையை நாமும் மறந்துவிட வேண்டாம். ஆசை வார்த்தைகளுக்கு மயங்காமல்-அடக்கு முறைக்கு கலங்காமல்-மனவலிமையுடன் போராடினால் நிச்சயம் வெற்றி கிட்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்துள்ளது.

# செஞ்சிலுவை வாகனத்தில் சென்ற இளைஞர் சுட்டுகொலை

(திருக்கோயில்)

திருக்கோயில் முகாமிலுள்ள சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரின் அனுமதியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரின் பாதுகாப்பில் செஞ்சிலுவைச்சங்க வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த எட்டுத்தமிழ் இளைஞர்களை சம்மாந்துறையில் வழிமறித்த விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரு இளைஞர்களை அந்த இடத்திலேயே சுட்டுக் கொலை செய்தனர். ஏனையோரை சம்மாந்துறை அதிரடிப்படை முகாமிற்கு அழைத்துச் சென்றனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய எந்தத்தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. (க)

## தமிழர் சுட்டுக்கொலை

சிறிலங்கா இராணுவத்தின் விசேட அதிரடிப்படையினரால் தமிழர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் மூவர் முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறன்று திருக்கோவிற்பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படைப் பிரிவினர் நான்கு தமிழ்ப் பொதுமக்களைக் கைதுசெய்தனர் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் ஏனைய மூவரும் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். (மு

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

HOT SPRING

A Weekly News Magazine of Current affairs published from Jaffna.

★ Authentic representation of Lively News.

★ To keep oneself abrest of the Issues, trends and developments reading of HOT SPRING is a must.